


விழுப்புரம் மாவட்டம் வானூர் வழக்கறிஞர் சங்கத்தின் செயலாளர் சுரேஷ்குமார் தலைமையில் அ.தி.மு.க. வழக்கறிஞர் பாண்டியன், நகைக் கடை உரிமையாளர் தொழிலதிபர் சரவணன், தே.மு.தி.க. சிவா ஆகியோருடன் 200 க்கும் மேற்பட்டோர் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் P.K.T. முரளி, KS.ராஜி, மைதிலி ராஜேந்திரன், ஒன்றிய குழு துணை தலைவர் பருவகீர்த்தனா விநாயகமூர்த்தி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் அன்புமணி, பிரேமா குப்புசாமி, கௌதம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில்

# அரசின் வழிமுறைகளைப் பின்பற்றி அனைவரும் பயன்பெற வேண்டும்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் வலியுறுத்தல்!



நாமக்கல் ஆக. 1-

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி, சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் நாமக்கல் நகராட்சி உள்ளிட்ட பகுதிகளில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மகளிர் உரிமைத் திட்டம் விண்ணப்ப பதிவு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம் மற்றும் சேந்தமங்கலம் கு.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து நாமக்கல் மாவட்டத்தில் இராசிபுரம் நகராட்சி, அண்ணா சாலை, அரசு மேல்நிலைப்பள்ளி, காக்காவேரி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பேளுக்குறிச்சி ஊராட்சி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகம், காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி, நியாயவிலைக் கடை, நாமக்கல் ஊராட்சி ஒன்றியம் வேட்டாம்பாடி கிராம சேவை மையம் மற்றும் நாமக்கல் நகராட்சி திருமண மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விண்ணப்ப பதிவு முகாம்களை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இதையடுத்து வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 24.07.2023 அன்று தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, அவ்விண்ணப்பங்களைப் பயோமெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, விண்ணப்பம் செய்ய வந்த மகளிருடன் மேற்கொண்டு வரும் பணிகள் குறித்து கேட்டறிந்து, கலந்துரையாடினார்.

அதன்படி, நாமக்கல் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பம் பெறும் முகாம்கள் இரண்டு கட்டங்களாக நடைபெறுகிறது. முதற்கட்டமாக 24.07.2023 அன்று முதல் 04.08.2023 வரை 611 இடங்களிலும், இரண்டாம் கட்டமாக 05.08.2023 முதல் 16.08.2023 வரை 303 இடங்களிலும் முகாம்கள் நடைபெற உள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பம் பெறும் முகாம்களில் 1059 பணியாளர்கள் மூலம் 24.07.2023 அன்று 39,004 விண்ணப்பங்களும், 25.07.2023 அன்று 51,478 விண்ணப்பங்களும், 26.07.2023 அன்று 49,288 விண்ணப்பங்களும், 27.07.2023 அன்று 43,914 விண்ணப்பங்களும் என மொத்தம் 1,83,684 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முகாம்களில் பயோமெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணி, விண்ணப்பங்கள் பதிவேற்றம், பொது மக்களுக்கு தேவையான குடிநீர், மின்சாரம், கழிவறை உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளை தடையின்றி வழங்க அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்ப பதிவு முகாம்களில் தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலுக்குட்பட்டு பதிவு செய்து அனைவரும் பயன்பெற வேண்டும் என வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட வன அலுவலர் ராஜாங்கம், நாமக்கல் நகர் மன்றத்தலைவர் து.கலாநிதி, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் சரவணன், நாமக்கல் வட்டாட்சியர் சக்திவேல், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட மாடலும்; மணிப்பூர், குஜராத் மாடலும்!

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நம் தலைவர், திராவிட மாடல் அரசை நடத்தும் முதல்வர்களில் முதல்வர், மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலவர பூமியான மணிப்பூரில் தங்களது விளையாட்டு பயிற்சியை தொடர முடியாமல் தவிப்பதால், அத்தகையவர்கள் தங்களது பயிற்சியை தமிழ்நாட்டில் தொடரலாம் என்ற அழைப்பை விடுத்துள்ளார், " "வாடிய பயிரை கண்ட பொழுதெல்லாம் வாடினேன் என்ற வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளின்" வரிகளுக்கு ஏற்ப இந்த அழைப்பு அமைந்துள்ளது.

சமீபத்தில் (25/07/2023) முதல்வர் கோப்பை நிறைவு விழாவில் பேசிய எதிர்காலத்தில் நம்மை வழிநடத்த போகும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்கள், மணிப்பூர் விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று அறிவித்தது தந்தைக்கு சளைத்தவரல்ல தனயன் என்று நிரூபித்தார்.

தலைவரின் திராவிட மாடல் அரசுக்கும், இன / சிறுபான்மை அழித்தொழிப்பில் தீவிரமாக ஈடுபட்டு வரும் மணிப்பூர் மற்றும் குஜராத் மாடல் அரசுகளுக்கும் இருக்கும் வேற்றுமையை காண்போம்.

ஆணும் பெண்ணும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதே திராவிட இயக்கத்தின் நோக்கமாகும். பெண்கள் கல்வி அறிவில் விருப்பம் கொள்ள வேண்டும் என்பதை தந்தை பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார். 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை கிடைக்க சட்டமியற்ற வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார் தந்தை பெரியார், அவரது கனவை நிறைவேற்றியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். அவரது வழி நின்று தொண்டாற்றும் தலைவர் ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மகளிர் சுயமரியாதை உணர்வுடன் வாழவே மகளிர் உரிமைத்தொகை திட்டம் என்று தெரிவித்துள்ளார். மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து சேவை மற்றும் கல்லூரி மாணவிகளுக்கான ரூ.1,000 திட்டத்தை அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இதைப்போல பெண்களின் முன்னேற்றத்திற்காக பல முன்னோடி திட்டங்களை தீட்டி நிறைவேற்றி வருகிறது திராவிட மாடல் அரசு.



பேராசிரியர் **சி.சேரன்**
தலைமை செயற்குழு உறுப்பினர்
மற்றும் பேராசிரியர் நற்றமிழ்
தொண்டகத்தின் செயலர்

இதற்கு மாறாக பாஜக ஆளும் குஜராத் மாநிலத்தில் 2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற கோத்ரா வன்முறை தொடர்பான சம்பவங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டது பெண்கள் தான், பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைக்கு சான்று பில்கிஸ் பானு வழக்கு, அக் கொடிய வன்முறைக்கு காரணமானவர்களை உச்சநீதிமன்றம் தண்டித்தது, ஆயுள் தண்டனை வழங்கியது, ஆனால் குஜராத் அரசு குற்றவாளிகளை தண்டனைக் காலம் முடியும் முன்னரே அனைவரையும் விடுதலை செய்தது. குற்றவாளிகளை சிறைவாயிலில் வரவேற்றது பா.ஜ.க.வை சேர்ந்த சங்கிகள்.

சமீபத்தில் மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க.வைச் சேர்ந்த சங்கி பொறுப்பாளர் ஒருவர் தலித் மனிதன் மீது சிறுநீர் கழித்த விவகாரம் பொது வெளியில் பெரும் தாக்கத்தையும் அருவருப்பையும் உண்டாக்கியது. தங்களது இந்துத்வா சித்தாந்திற்கு எதிரானவர்களை இந்திய நாட்டிற்கு எதிரானவர்கள் என்று பட்டம் சூட்டுவது சங்கிகளின் அரசியல் வழக்கம். இதே போலவே சுமார் மூன்று மாதங்களாக மணிப்பூரில் நடைபெறும் இனக்கலவரம் கோத்ரா வன்முறையை பின்பற்றுவதாகும். மணிப்பூர் வன்முறையாளர்கள் கையில் நவீன துப்பாக்கிகள் சுலபமாக பயன்படுத்தப்படுகிறது என்று தெரிகிறது.

மணிப்பூர் மாநில குக்கி மற்றும் மைத்தேயி இனக்குழுக்களுக்கு இடையே நீண்ட நெடுங்காலமாக முரண்களும், முட்டல்களும் உள்ளது. தற்பொழுது இவ்விரு இனக்குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து மோதல்கள் வன்முறை வடிவத்தை பெற்றுவிட்டது. மே மாதம் நாலாம் நாள் முதல் வன்முறை வெறியாட்டம் தலைவிரித்தாடுகிறது. அரசின் ஆயுத கிடங்குகளில் இருந்த ஆயுதங்கள் கொள்ளையடிக்கப்பட்டது. சுமார் 80 நாட்களாக வன்முறை வெறியாட்டம் தொடர்கிறது, கொல்லப்பட்டவர்கள் பலர். 40,000/க்கும் அதிகமான மக்கள் சொந்த நாட்டிலேயே அகதிகள் முகாமில் அச்சத்துடன் தங்கியுள்ளனர். ஆயுதம் ஏந்திய வன்முறை குழுக்கள், வீடுகள், தேவாலயங்களுக்கு தீவைத்து தரைமட்டமாக்கி வருகிறது.

மேமாதம் பிரச்சனை வெடித்தப் பொழுது, உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், பிரதமர் மோடியும் கர்நாடக மாநிலத்தில் சட்டமன்ற தேர்தல் பரப்புரையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். அப்பரப்புரையில் மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கட்சியின் ஆட்சி ( Double engine govt ) மாநிலத்திற்கு அளப்பரிய பலன் அளிக்கும் என்று தேர்தல் பரப்புரையில் தொடர்ந்து கூறி வந்தனர். மணிப்பூரிலும், மத்தியிலும் பாஜக ஆட்சி தான் நடைபெறுகிறது. இரு அரசுகளும் வன்முனையை அடக்காமல் கை கட்டி வேடிக்கை பார்த்து வருகிறது. முதலமைச்சர் பைரேன்சிங் மைத்தியே இனக்குழுக்களுக்கு ஆதரவாக செயல்படுகின்றார் என்ற குற்றச்சாட்டை பலரும் முன்வைக்கின்றனர்.

வலைதளங்களுக்கு இருந்த தடையை தற்சமயம் நீக்கியதால் இப்பொழுது வெளியான வீடியோவில் தங்களிடம் சிக்கிய இரண்டு பழங்குடி பெண்களை தாக்கி நிர்வாணமாக்கி ஊர்வலமாக இழுத்துச் சென்று ஆயதமேந்திய கும்பலின் வெறிச்செயல் நாட்டு மக்களை அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கிறது. இக்கானொலி பிரதமர் மோடியை பேச வைத்திருக்கிறது. பாதிக்கப்பட்ட பெண் தனது பேட்டியில் போலீசாரே தங்களை வனமுறையாளர்களிடம் ஒப்படைத்தாக கூறியது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. இரு பெண்களில் ஒருவரை காப்பாற்ற முயன்ற அவரது சகோதரன் கல்லால் அப்பெண்ணின் கண் முன்னே அடித்து கொன்றுவிட்டார்கள். இன்னொரு பெண்ணின் கணவர் முன்னாள் இராணுவ வீரர், கார்கில் போரில் பங்கேற்றவர், நாட்டை காப்பாற்றிய தன்னால் தனது மனைவியை காப்பாற்ற முடியாமல் போனதால் கதறி அழுதது காண்போர் நெஞ்சை உலுக்கியது.

இதே மாதிரி நூற்றுக் கணக்கான பெண்களுக்கு நேர்ந்திருக்க வாய்ப்புண்டு என்று மிகச் சாதரணமாக சொல்கிறார், மணிப்பூர் முதல்வர் பைரேன்சிங். பெண்களுக்கு பாதுகாப்பில்லாத மாநிலமாக மணிப்பூர் மாறியுள்ளது. மணிப்பூர் நிலம் தீயிட்டதால் கருப்பு நிறமாகவும், கொல்லப்பட்ட மனித உயிர்களின் இரத்தம் சிந்தியதாக சிவப்பாகவும் உள்ளதாக பாபு வர்கீஸ் என்ற பத்திரிக்கையாளர் பதிவிட்டுள்ளார். எதிர்காலம் எப்படியிருக்கும் என்று தெரியாததால் பெண்கள், அனாதையான குழந்தைகள் தங்களது வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டு, இருண்ட எதிர்காலத்தை பற்றிய கவலையில் ஆழ்ந்திருக்கிறார்கள்.

பல்லாயிரவர் பாதிக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றத்திலும் எதிர்க்கட்சியினர் அமளியால் சட்டப்பிரிவு 355 இரகசியமாக அமல்படுத்தியுள்ளது. இரண்டு மூத்த போலீஸ் அதிகாரிகளை முதலமைச்சர் அவர்களுக்கு உதவ அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் தமிழ்நாட்டு பெண்களின் கல்வியிலும், சமூகத்திலும் மேன்மையான நிலையை அடைய தொடர்ந்து பாடுபட்டு வருவது திராவிட மாடல் ஆட்சியும், அதற்கு தலைமை தாங்கும் முதல்வரும், ஆனால் இதற்கு நேர்மாறாக இரு மாநிலங்களிலும் பெண்களுக்கு எதிராக வன்செயல் புரிவது பாஜகதான் என்பதை நாடறியும்.

இத்தகைய கொடுமையான செயல்களை செய்துவரும் பாஜகவிற்கு எதிர் வரும் தேர்தலில் பெண்கள் வாக்குகளால் தோற்கடிக்கப்படுவது உறுதி. நம் உயிரனைய தலைவர் அவர்கள் யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் கவனமாக இருக்குமாறு தொடர்ந்து அறிவுறுத்துவதை வாக்காளர்களுக்கு தெரிவிப்பது ஒவ்வொரு தொண்டனின் கடமையாகும்.

### சென்னை வட கிழக்கு

# மாவட்ட தி.மு.க. வர்த்தக அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் லயன் வீ. தியாகராஜன் ஏற்பாடு!

சென்னை, ஆக.1-

சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தக அணியின் புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் ஆலோசனை அறிமுக கூட்டம் சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. கழகச் செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ். சுதர்சனம் ஆலோசனைப்படி வர்த்தக அணியின் மாநிலச் செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் அறிவுறுத்தலின்படி மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் லயன் வீ. தியாகராஜன் ஏற்பாட்டில் அன்னை சிவகாமி நகரில் உள்ள மாவட்ட வர்த்தக அணி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (30.07.2023, ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது.

மாவட்ட அணி தலைவர் ஆர்.பாபு, துணைத் தலைவர் எஸ்.சுரேஷ், துணை அமைப்பாளர் பொன். கல்விநாதன், அ.தயாளன், வி.சுரேஷ்குமார், இரா. கிருஷ்ணமூர்த்தி, என்.செல்வம், ரகுகுமார், தா. ஜெயசங்கர், இரா.கருணாநிதி, பி.ஜெயராஜ் ஆகியோர் கலந்துகொண்டு கழக ஆக்கப்பணிகள் மற்றும் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடர் விழாவினை சிறப்புக்கும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை சிறப்பாக செய்திட ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதில் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழகத் துணைச் செயலாளர் யூ.எஸ். குறளரசன், பகுதி பிரதிநிதி ஏ.ராஜேந்திரன், ஏ.தனபால், விளையாட்டு அணி துணை அமைப்பாளர் பி.ஆர் .பரசுராமன், மீனவர் அணி தேசப்பன், இலக்கிய அணி வி.மணி , மூன்றாவது வட்ட பொருளாளர் எம். ராஜா, எஸ்.மகேஷ், மணி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பெங்களூரு – சகாயபுரம் கிளைக் கழக

# முன்னாள் பொருளாளர் ஏ.தங்கராஜ் மறைவு!

## மாநில அமைப்பாளர் ந.இராமசாமி - கழகத்தினர் இரங்கல்!

பெங்களூரு, ஆக. 1-

கர்நாடகா - பெங்களூரு, சகாயபுரம் கிளைக் கழக முன்னாள் பொருளாளர் ஏ.தங்கராஜ் நேற்று முன்தினம் (30.7.2023) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவுக்கு மாநில அமைப்பாளர் ந. இராமசாமி மற்றும் கழகத்தினர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அது வருமாறு:-

சகாயபுரம் தி.மு.க கிளைக் கழக முன்னாள் பொருளாளரும் கழக செயல்வீரருமான அருமை சகோதரர் ஏ.தங்கராஜ் மறைவு செய்தி கேட்டு ஆறாதுயரம் கொண்டேன். அவரது மறைவுக்கு கருநாட மாநில தி.மு.க சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் அவரது குடும்பத்திற்கு ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன் என கருநாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந.இராமசாமி மற்றும் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.



திருப்பூர் மாநகராட்சி, 3வது மண்டலம், வார்டு எண் 44, ஈஸ்வரன் கோவில் அருகில் 15வது மத்திய நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் மற்றும் ரூ.5.98 கோடி மதிப்பீட்டில் 4,443 புதிய மின்விளக்குகள் பொருத்தும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாநகராட்சி மேயர், ந.தினேஷ்குமார் முன்னிலையில் அமைச்சர், மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் டி.கே.டி.மு.நாகராசன், ரா.பாலசுப்பிரமணியன், சி.கோவிந்தசாமி, தம்பி ஆர். கோவிந்தராஜ், வெ.உமாமகேஸ்வரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி கீரமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள், சுருதி மதுரை மருத்துவக் கல்லூரி, ஜனனி திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, சுபதாரணி ஆதிபராசக்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர் மனோஜ் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி ஆகியோருக்கு மருத்துவம் பயில இடம் கிடைத்ததைத் தொடர்ந்து தங்களது பெற்றோர்களுடன் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை துறை அமைச்சர் சிவ.வீ மெய்யநாதனிடம் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.